# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

## சென்னை - 6.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு ஆண்டுதோறும் தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர் மற்றும் அவரை சார்ந்தவர்களின் நலனை மேம்படுத்தும்வகையில் வாரியத்தின் மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நலத் திட்டங்களைத் துய்ப்பதற்கான தொழிலாளியின் மாதாந்திர ஊதிய உச்ச வரம்பு ரூ.25,000/- (அடிப்படை சம்பளம் மற்றும் அகவிலைப்படி) ஆகும்.

1. **தையல் இயந்திரம் உதவித் தொகை :** அரசு அங்கீகாரம் பெற்ற தையற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெறும் தொழிலாளர்கள் மற்றும் அவரை சார்ந்தவர்களுக்கு தையல் இயந்திரம் வாங்குவதற்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

2. **கல்வி உதவித் தொகை :** பள்ளிக் கல்வி முதல் உயர் கல்வி பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி நாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆகும்.

| | | |
|---|---|---|
| (i) | மழலையர் பள்ளி (Pre-K.G) முதல் 5-ம் வகுப்பு வரை | ரூ. 1,000/- |
| (ii) | 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை | ரூ. 2,000/- |
| (iii) | 9-ம் வகுப்பு மற்றும் 10-ம் வகுப்பு | ரூ. 3,000/- |
| (iv) | மேல்நிலைக் கல்வி (+1, +2) | ரூ. 4,000/- |
| (v) | தொழிற்பயிற்சிக் கல்வி (I.T.I.) | ரூ. 4,000/- |
| (vi) | பொறியியல், மருத்துவம், ஆசிரியர் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி பட்டயப் படிப்புகளுக்கு | ரூ. 5,000/- |
| (vii) | பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம், ஆசிரியர் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி பட்ட படிப்புகளுக்கு | ரூ. 8,000/- |
| (viii) | பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம், ஆசிரியர் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி பட்ட மேற்படிப்புகளுக்கு | ரூ. 12,000/- |

3. **கல்வி ஊக்கத் தொகை :** தமிழ்நாட்டில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அரசு பொதுத் தேர்வில் முதல் பத்து இடங்கள் பெறும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு, 10-ம் வகுப்பிற்கு ரூ. 2,000/-ம், 12ம் வகுப்பிற்கு ரூ.3,000/-ம் கல்வி ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஊதிய உச்சவரம்பு ஏதும் இல்லை. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி நாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆகும்.

4. **பாடநூல் உதவித் தொகை :** தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்குவதற்காக கீழ்க்கண்டவாறு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி நாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆகும்.

| | |
|---|---|
| 1. மேல்நிலைக் கல்வி ரூ.1,000/- | 3. பட்டப் படிப்பு ரூ.2,000/- |
| 2. பட்டயப் படிப்பு ரூ.1,500/- | 4. பட்ட மேற்படிப்பு ரூ.3,000/- |

5. **அடிப்படை கணினிப் பயிற்சி :** தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் அடிப்படை கணினிப் பயிற்சி பயில தலா ரூ.1,000/- வருவாய் மாவட்டத்திற்கு 5 பேருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

6. **மாதிரி வினாத்தாள் மற்றும் பயிற்சி கையேடு:** 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தால் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள்கள் கையேடு இலவசமாக வழங்கப்படுகிறது.

7. **நுழைவுத் தேர்வு உதவித் தொகை :** உயர் கல்விக்கான நுழைவுத் தேர்வுகள் எழுதும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பயிற்சி உதவித் தொகை ரூ.2,000/- வழங்கப்படுகிறது.

8. **மாவட்ட அளவிலான விளையாட்டு உதவித் தொகை :** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் (SDAT) அங்கீகரிக்கப்பட்ட / அனுமதிக்கப்பட்ட மாவட்ட அளவிலான உள்விளையாட்டு / வெளி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு மாநில அளவில் விளையாடத் தகுதி பெறும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை ரூ.3,000/-, 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை ரூ.5,000/- வழங்கப்படுகிறது.

9. **மாநில அளவிலான விளையாட்டு ஊக்கத் தொகை :** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் (SDAT) அங்கீகரிக்கப்பட்ட / அனுமதிக்கப்பட்ட உள் / வெளி விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முதல் பரிசு. ரூ.50,000/-ம், இரண்டாம் பரிசு ரூ.30,000/-ம், மூன்றாம் பரிசு ரூ.20,000/-ம் வழங்கப்படுகிறது.

10. **ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை மேம்பாட்டு பயிற்சி :** தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

11. **திருமண உதவித் தொகை :** சட்டப்படி திருமண வயதை அடைந்த தொழிலாளி, அவர்தம் மகன் / மகளுக்கு ரூ.10,000/- வழங்கப்படுகிறது. திருமணம் முடிந்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

12. **மூக்குக்கண்ணாடி உதவித் தொகை :** தொழிலாளர்களுக்கு மூக்குக்கண்ணாடி உதவித்தொகையாக ரூ.1,000/- வரை வழங்கப்படுகிறது.

13. **விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை :** தொழிலாளர் விபத்தில் மரணமடைந்தால் விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.1,05,000/- தொழிலாளியின் வாரிசுதாரருக்கு வழங்கப்படுகிறது. மரணமடைந்த நாளிலிருந்து ஓர் ஆண்டிற்குள் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

14. **இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை :** இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.30,000/- தொழிலாளியின் வாரிசுதாரருக்கு வழங்கப்படுகிறது. மரணமடைந்த நாளிலிருந்து ஓர் ஆண்டிற்குள் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்

15. **''உழைப்பவர் உலகம்'' மாத இதழ் :** "உழைப்பவர் உலகம்" என்ற பெயரில் தொழிலாளர் நலச்சட்ட மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் தொழிலாளர் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், மறுநிர்ணய குறைந்தளவு ஊதிய வீதங்கள், வாசகர் கேள்வி பதில், நுகர்வோர் விலைவாசி குறியீட்டெண் போன்றவை இடம் பெறுகின்றன. இவ்விதழினை ஆண்டு சந்தா ரூ.100/- அல்லது ஆயுள் சந்தா ரூ. 1,000/- (20 ஆண்டுகள்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

16. **விடுமுறை இல்லங்கள் :** தொழிலாளர் குடும்பத்துடன் சுற்றுலா சென்று தங்குவதற்காக மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**விடுமுறை இல்ல கட்டண விவரம்**

| விடுமுறை இல்லம் | தொழிலாளர்களுக்கு (ஒரு படுக்கைக்கு) | | பொது மக்களுக்கு (ஒரு படுக்கைக்கு) | | தொலைபேசி எண். |
|---|---|---|---|---|---|
| | இரு படுக்கை அறை ரூ. | பொது அறை ரூ. | இரு படுக்கை அறை ரூ. | பொது அறை ரூ. | |
| ஜவஹர்லால் நேரு இல்லம், மாமல்லபுரம். | 70/- | 40/- | 375/- | 190/- | 044-27442208 |
| சிங்காரவேலர் இல்லம், வால்பாறை. | 80/- | 40/- | 250/- | 190/- | 04253-221100 |
| திரு.வி.க.இல்லம், குற்றாலம். சாதாரண காலம் | 60/- | 40/- | 250/- | 125/- | |
| சாரல் காலம் | 70/- | 60/- | 375/- | 190/- | 04633-283584 |

17. **ஜீவா இல்லம் :** தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆண், பெண் இருபாலரும் தங்குவதற்காக சென்னை, டி.எம்.எஸ். வளாகத்தில் ஜீவா இல்லம் செயல்பட்டு வருகிறது. (தொலைபேசி எண் 044-2432 1657)

கட்டணம் : பொது அறை - ரூ.50/- (ஒரு படுக்கைக்கு);
இரண்டு படுக்கை அறை - ரூ. 80/- (ஒரு படுக்கைக்கு)

---

*மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

**செயலாளர், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்,**
அஞ்சல் பெட்டி எண். 718, டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை -600 006.
**Ph : 044-2432 1542, Cell : 89 39 782 783,**
**E-mail ID : tnlwboard@gmail.com, Website : www.lwb.tn.gov.in**